Examination: **M.A Tamil**

**SECTION 1 - SECTION 1**

**Question No.1**

“அழுதால் உன்னைப் பெறலாமே” என்றவர்

- திருநாவுக்கரசர்
- மாணிக்கவாசகர்
- திருஞானசம்பந்தர்
- சுந்தரர்

**Question No.2**

‘சேயோன்’ என்ற சொல் குறிக்கும் கடவுள்

- திருமால்
- இந்திரன்
- முருகன்
- சிவபெருமான்

**Question No.3**

“ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி மாற்றுப்
பிறக்கமருந் தெனக்குக் கிட்டுதில்லை” -
என்னும்பாடலைப்பாடியவர்

அழுகண்ணிச்சித்தர்

குதம்பைச்சித்தர்

கொங்கணச்சித்தர்

சிவவாக்கியார்

Question No.4

களவின்கண் கூற்று நிகழ்த்துவோர்
I.தோழி
II. கிழவன்
III. பாங்கன்
IV. பாணன்
இவற்றுள்

I, II, III, IV சரி

I, II, IV சரி

I, II, III, IVசரியல்ல

I, II, III சரி

**Question No.5**

சந்தானக் குரவர்கள்
I.மெய்கண்டார்
II. அருணந்திசிவம்
III. மறைஞானசம்பந்தர்
IV. உமாபதிசிவம்
இவற்றுள்

I, II, III, IV சரி

I, II, IV சரி

I, II சரி

I, II, III, IV சரியல்ல

Question No.6

‘அப்பர்’ என்றழைக்கப்படும் சைவக்குரவரின் இயற்பெயர்

- சுந்தரர்
- திருஞானசம்பந்தர்
- மருள்நீக்கியார்
- மாணிக்கவாசகர்

Question No.7

‘வெண்சீர்வெண்டளை’ ஆவது

- விளம் முன் நேர்

காய் முன் நேர்

- மா முன் நேர்
- கனி முன் நேர்

**Question No.8**

'மனோன்மணியம்' என்னும் கவிதைநூலின் ஆசிரியர்

- பெ. சுந்தரம்பிள்ளை
- மறைமலைஅடிகள்
- பம்மல்சம்பந்தமுதலியார்
- சீத்தலைசாத்தனார்

**Question No.9**

"ஊற்றில் மலர்ந்தது" எனும் குறுநாவலின் ஆசிரியர்

- சோ. தர்மன்
- பிரபஞ்சன்
- சு. சமுத்திரம்
- பொன்னீலன்

**Question No.10**

“தொல்காப்பியத்தின் ஆசிரியர் யார்?” என்பது

- அறியாவினா
- அறிவினா
- ஐயவினா
- ஏவல்வினா

**Question No.11**

“சமுதாயப்பாட்டு” என அழைக்கப்படும் நூல் எது?

- பெரும்பாணாற்றுப்படை
- குறிஞ்சிப்பாட்டு
- நெடுநல்வாடை
- பட்டினப்பாலை

**Question No.12**

சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர்

- பெருவாயில்முள்ளியார்
- நல்லாதனார்
- காரியாசான்
- பூதஞ்சேந்தனார்

Question No.13

தோழி அறத்தொடு நிற்றல்
I.கூறுதல்
II. வேட்கையுரைத்தல்
III. தன்வறற்கரத்தல்
IV. தலைப்பாடு
இவற்றுள்

- I, II, IV சரி
- I, III, IVசரி
- I, II, III, IV சரியல்ல
- I, II, III, IVசரி

Question No.14

நிரல்படுத்துக களவொழுக்க உணர்வுகள்

வேட்கை, சாக்காடு, மெலிதல், மறத்தல்

- வேட்கை, மறத்தல், மெலிதல், சாக்காடு
- வேட்கை, மெலிதல், மறத்தல், சாக்காடு
- வேட்கை, மறத்தல், சாக்காடு, மெலிதல்

**Question No.15**

ஓரங்க நாடக அமைப்பு கொண்ட தொகை நூல்

- குறிஞ்சிப்பாட்டு
- கலித்தொகை
- பரிபாடல்
- குறுந்தொகை

**Question No.16**

கலம்பகத்தின் உறுப்புகள் மொத்தம்

- இருபத்துநான்கு
- பன்னிரண்டு
- பதினெட்டு
- இருபத்திரண்டு

**Question No.17**

‘திருவாய்மொழி’யை அருளியவர்

- பொய்கைஆழ்வார்
- ஆண்டாள்
- பெரியாழ்வார்
- நம்மாழ்வார்

**Question No.18**

வடக்கிருந்து உயிர் நீத்த சங்ககாலக் கவிஞர்

- வெள்ளிவீதியார்
- கோவூர்கிழார்
- ஆவூர்மூலங்கிழார்
- பிசிராந்தையார்

**Question No.19**

‘தமிழ் நாவல் இலக்கியத்தின் தந்தை’ எனப் போற்றப்படுபவர்

- வேதநாயகசாஸ்திரியார்
- வேதநாயகம்பிள்ளை

- சாமுவேல்பிள்ளை
- ஹெச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை

**Question No.20**

'இஸ்லாமியக்கம்பர்' எனப் போற்றப்படுபவர்

- செய்குத்தம்பிபாவலர்
- அப்துல்ரகுமான்
- உமறுப்புலவர்
- குணங்குடிமஸ்தான்

**Question No.21**

"பாயிரம் இல்லது __________ அன்றே"

- கவிதை
- பனுவல்
- பாடல்
- காவியம்

**Question No.22**

“பிள்ளைத்தமிழ்” என்னும் சிற்றிலக்கிய வகைமையில் முதன் முதல் இலக்கியம் படைத்தவர்

- குமரகுருபரர்
- ஒட்டக்கூத்தர்
- பகழிக்கூத்தர்
- பெரியாழ்வார்

Question No.23

திருக்குறளின் காமத்துப்பால் கொண்டிருக்கும் அதிகாரங்கள் மொத்தம்

- இருபத்தைந்து
- முப்பத்தெட்டு
- இருபத்தெட்டு
- முப்பத்தைந்து

Question No.24

“ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவர் இல்லை” என்றவர்

- திருமங்கைஆழ்வார்
- திருமழிசைஆழ்வார்
- குலசேகரஆழ்வார்
- தொண்டரடிப்பொடிஆழ்வார்

**Question No.25**

“கொங்குதேர்வாழ்க்கைஅஞ்சிறைத்தும்பி”எனத்தொ
டங்கும் குறுந்தொகைக்கவிதையை இயற்றியவர்

- பரணர்
- கபிலர்
- இறையனார்
- கணிமேதாவியார்

**Question No.26**

பண்டிதமணி மு. கதிரேசன்செட்டியார் மொழி
பெயர்த்த நூல்கள்
I.உதயணன் சரிதை
II. இரசங்காதாரம்
III. சக்கிரநீதி
IV. சுலோசனை
இவற்றுள்

- I, II, III, IV சரி
- III, IV சரி
- I, II, III, IV சரியல்ல
- I, II, III சரி

**Question No.27**

வினைச்சொல் என்பது
I.செயலைக்குறிப்பது
II. காலமொடு தோன்றுவது
III. வேற்றுமை கொள்வது
IV. இருதிணைக்கும் உரியது
இவற்றுள்

- I, II, III சரி
- I, II, III, IV சரி
- I, II, IV சரி
- I, II, III, IV சரியல்ல

**Question No.28**

தீவகவணி என்பது
I.பொருளணி
II. விளக்கு அணி
III. இரட்டைத்தொடை
IV. ஓரிடத்தில் நின்றசொல் பல இடங்களிலும் சென்று பொருள் தருவது

இவற்றுள்

- I, II, IIIசரி
- I, II, IVசரி
- I, II, III, IVசரி
- I, III, IVசரி

**Question No.29**

‘மாநகர்’ என்பது

- உரிச்சொல் தொடர்
- எழுவாய்த் தொடர்
- அடைமொழி
- இடைச்சொல் தொடர்

**Question No.30**

‘மருதம்’ என்பது

- இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
- கூடலும் கூடல் நிமித்தமும்
- இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
- ஊடலும் ஊடல் நிமித்தமும்

**Question No.31**

விருத்தப்பாவில் இயற்றப்பட்ட முதல் காப்பியம்

- கம்பராமாயணம்
- மணிமேகலை
-

சீவகசிந்தாமணி

சிலப்பதிகாரம்

Question No.32

நிரல்படுத்துக உவகையின் நிலைக்களன்கள்

புணர்வு, விளையாட்டு, செல்வம், புலன்

செல்வம், விளையாட்டு, புணர்வு, புலன்

புலன், புணர்வு, செல்வம், விளையாட்டு

செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு

Question No.33

உறுதிக்கூற்று (உ) : பரிசில் பெற்றுச் செல்லும் ஒரு
கூத்தன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்தியது
கூத்தராற்றுப்படை ஆகும்
காரணம் (கா) : கூத்தராற்றுப்படை பாடாண்
திணையின் ஒரு துறையாகும்.

(உ) சரி ; (கா) சரி

(உ) சரி ; (கா) சரியன்று

(உ) சரியல்ல ; (கா) சரியல்ல

(உ) சரியன்று ; (கா) சரி

**Question No.34**

தமிழ் இலக்கியத்திற்காக 'ஞானபீட' விருது பெற்றவர்

- தி. ஜானகிராமன்
- தீபம்நா. பார்த்தசாரதி
- அகிலன்
- கல்கி

**Question No.35**

"படிமை" அல்லது "பிரதிமை" என்னும் பெயர் எக்கலையுடன் தொடர்புடையது

- ஓவியக்கலை
- சிற்பக்கலை

இசைக்கலை

கட்டிடக்கலை

Question No.36

'பொன்னகரம்' என்ற சிறுகதையின் ஆசிரியர்

கு.ப. ராஜகோபாலன்

ஜெயகாந்தன்

சு. சமுத்திரம்

புதுமைப்பித்தன்

Question No.37

"ஓடாக்குதிரை" என்பது

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

வினையெச்சம்

வினையாலணையும்பெயர்

பெயரெச்சம்

Question No.38

‘பொற்குடம்’ என்பது

- இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை
- ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை
- நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை
- மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

**Question No.39**

நாற்கவிகள்
I.ஆசுகவி – கொடுத்த பொருளை அடுத்த பொழுதில் பாடுபவன்
II. மதுரகவி – இனிமை பெருக பாடுபவன்
III. சரமகவி – இறந்தவர் மீது இறக்கம் கொண்டு பாடுபவன்
IV. வித்தாரக்கவி – ஒரு பொருள் குறித்து மிகுதியாக பாடுபவன்

இவற்றுள்

- I, II, III, IVசரியல்ல
-

I, II, III, IVசரி

I, II, IIIசரி

I, II, IVசரி

**Question No.40**

“கொலை வாளினை எடடா - மிகு
கொடியோர் செயல் அறவே” என்றவர்

முடியரசன்

வாணிதாசன்

பாரதியார்

பாரதிதாசன்

Question No.41

தொல்காப்பியப் பொருளதிகார உரை
I.இளம்பூரணம்
II. நச்சினார்க்கினியர்
III. பாவலரேறுபாலசுந்தரனார்
IV. பேராசிரியர்
இவற்றுள்

I, II, III, IV சரி

I, II சரி

I, II, III, IV சரியல்ல

I, II, IV சரி

**Question No.42**

தொல்காப்பியத்தில் இயல்கள் என முடியும்
இயல்கள் எத்தனை?

- 22
- 25
- 27
- 24

**Question No.43**

வேற்றுமைகள் மொத்தம்

- ஆறு
- ஏழு
- எட்டு
- பத்து

Question No.44

‘தம்பிரான்தோழர்’ எனப்படுபவர்

- திருநாவுக்கரசர்
- திருஞானசம்பந்தர்
- சுந்தரர்
- மாணிக்கவாசகர்

Question No.45

‘ஒருவண்டி சென்ரியூ’ என்ற கவிதை நூலின் ஆசிரியர்

- சிற்பி
- ஈரோடுதமிழன்பன்
- மு. மேத்தா
- அப்துல்ரகுமான்

Question No.46

தபுதாரநிலை என்பது
I.நோன்பிருத்தல் என்றுபொருள்
II. மனைவியை இழந்த கணவன் வருத்தத்துடன் தனியே வாழ்வது
III. கணவனை இழந்த பெண் கைம்மை நோன்பிருதல்
IV. அணிகலன் அணிந்த மனைவி இறந்தாள்
இவற்றுள்

IIIசரி

I, IIசரி

II, IVசரி

IVசரி

**Question No.47**

‘ஆத்திசூடி’யின் ஆசிரியர்

ஔவையார்

ஆதிமந்தியார்

காரைக்கால் அம்மையார்

ஆண்டாள்

Question No.48

'பெரியபுராணம்' இயற்றியவர்

குமரகுருபரர்

ஒட்டக்கூத்தர்

சேக்கிழார்

கச்சியப்ப முனிவர்

Question No.49

'நாடகம்' என்ற சொல்லை முதன் முதல் வழங்கியவர்

அகத்தியர்

சேனாவரையர்

இளம்பூரணர்

தொல்காப்பியர்

Question No.50

“கொல்யானை” என்ற தொடர்

- வினையெச்சம்
- வினைத்தொகை
- பண்புத்தொகை
- பெயரெச்சம்

**Question No.51**

அண்ணாதுரைக்கு ‘அறிஞர்’ என்ற பட்டப் பெயரைச் சூட்டியவர்

- ராஜாஜி
- பாரதிதாசன்
- பெரியார்
- திரு.வி. கல்யாணசுந்தரனார்

**Question No.52**

‘தும்பைத்திணை’ என்பது

- வெற்றி பெற்றமன்னனின் வீரம், கொடை, கருணை, புகழ் பாராட்டல்
-

இருபெரும் வேந்தர் போர்க்களத்தில் பெரும்போரை நிகழ்த்தல்

- பகை மன்னனின் முற்றுகையிலிருந்து மன்னன் தன் நாட்டின் எயில்காத்தல்
- போரில் ஈடுபட்டவேந்தர் இருவருள் ஒருவர் வெற்றி பெறுதல்

**Question No.53**

'கருணாமிர்தசாகரம்' என்னும் நூலின் ஆசிரியர்

- விபுலானந்தஅடிகள்
- ஆபிரகாம்பண்டிதர்
- தண்டபாணிதேசிகர்
- முத்துசாமிதிட்சிதர்

**Question No.54**

உறுதிக்கூற்று (உ) : வண்ணக்களஞ்சியப் புலவரின் இயற்பெயர் முகைதீன்
காரணம் (கா) : வண்ணம் பாடுவதில் வல்லவர் ஆதலால் வண்ணக்களஞ்சியப் புலவர் எனப்பட்டார்

- (உ) சரியன்று ; (கா) சரி

(உ) சரி ; (கா) சரியன்று

(உ) சரி ; (கா) சரி

(உ) சரியல்ல ; (கா) சரியல்ல

**Question No.55**

"மறவற்க மாசற்றார் கேண்மை" என்ற அடி இடம் பெற்ற அற நூல்

பழமொழிநானூறு

கொன்றைவேந்தன்

திருக்குறள்

நாலடியார்

**Question No.56**

2012ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாவல் எது?

தோல்

காவல் கோட்டம்

அஞ்ஞாடி

கொற்கை

Question No.57

உறுதிக்கூற்று (உ) : மடக்கணி என்பது பொருளணியியலில் ஒன்று
காரணம் (கா) : வினாவிற்கு விடையாக ஒரு மொழியும் தொடர் மொழியும் புணர்த்துப் பாடுவது மடக்கணிஆகும்

(உ) சரியன்று ; (கா) சரி

(உ) சரி ; (கா) சரியன்று

(உ) சரியல்ல ; (கா) சரியல்ல

(உ) சரி ; (கா) சரி

Question No.58

'நீலகேசி' என்பதன் பொருள்

- நீண்டகூந்தலை உடையவள்
- கருத்தகூந்தலை உடையவள்
- நீலநிறக்கூந்தலை உடையவள்
- வெளுத்தகூந்தலை உடையவள்

Question No.59

'கலிங்கத்துப்பரணி'என்ற நூலின் ஆசிரியர்

- அருணாச்சலக்கவிராயர்
- ஜெயங்கொண்டார்
- புகழேந்திப்புலவர்
- தஞ்சைவாணன்

Question No.60

“தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்து உரைப்பது கவிதை” என்றவர்

- பாரதிதாசன்
- நாமக்கல்வே. இராமலிங்கம்பிள்ளை
- தேசிகவிநாயகம்பிள்ளை
- சுப்பிரமணியபாரதியார்

**Question No.61**

நிரல்படுத்துக யுவபுரஸ்கார் விருது பெற்றவர்கள்

- சுனில்கிருஷ்ணன், மலர்வதி, அபிலாஷ், லட்சுமிசரவணக்குமார்
- லட்சுமிசரவணக்குமார், அபிலாஷ், மலர்வதி, சுனில்கிருஷ்ணன்
- அபிலாஷ், லட்சுமிசரவணக்குமார், சுனில்கிருஷ்ணன், மலர்வதி
- மலர்வதி, அபிலாஷ், லட்சுமிசரவணக்குமார், சுனில்கிருஷ்ணன்

**Question No.62**

‘மதிமுகம்’ என்பது

அன்மொழித்தொகை

- உவமைத்தொகை
- உருவகம்
- உம்மைத்தொகை

Question No.63

'அரிச்சந்திரா' என்னும் நாடகத்தின் ஆசிரியர்

- சங்கரதாஸ்சுவாமிகள்
- பரிதிமாற்கலைஞர்
- பம்மல்சம்பந்தமுதலியார்
- அவ்வைசண்முகம்

Question No.64

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"
என்றவர்

- பட்டினத்தார்
- அருணகிரிநாதர்
- இராமலிங்கஅடிகள்
-

தாயுமானவர்

Question No.65

நிரல்படுத்துக வெண்பா வாய்ப்பாடு

- பிறப்பு, நாள், மலர், காசு
- மலர், காசு, பிறப்பு, நாள்
- காசு, பிறப்பு, நாள், மலர்
- நாள், மலர், காசு, பிறப்பு

Question No.66

நிரல்படுத்துக நிலங்களின் வகைப்பாடு

- வரை, சுரம், புறவு, பழனம், திரை
- சுரம், வரை, திரை, புறவு, பழனம்
- வரை, பழனம், புறவு, திரை, சுரம்
- புறவு, பழனம், சுரம், வரை, திரை

Question No.67

நிரல்படுத்துக காலவரிசைப்படி குழந்தை இதழ்கள்

- பாலவிநோதினி, பாலபாரதி, பாப்பா, பாலதீபிகை
- பாலதீபிகை, பாலவிநோதினி, பாப்பா, பாலபாரதி
- பாலபாரதி, பாலதீபிகை, பாலவிநோதினி, பாப்பா
- பாப்பா, பாலபாரதி, பாலதீபிகை, பாலவிநோதினி

**Question No.68**

நிரல்படுத்துக நூலின் நால் வகை மரபு

- சூத்திரம், பிண்டம், படலம், ஓத்து
- சூத்திரம், ஓத்து, பிண்டம், படலம்,
- சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம்
- சூத்திரம், படலம், ஓத்து, பிண்டம்

**Question No.69**

பெருவுடையார் கோயிலைக் கட்டியவர்
I.கரிகால்வளவன்
II. இராசேந்திரன்
III. சிவபாதசேகரன்
IV. குலோத்துங்கன்
இவற்றுள்

IIசரி

I, II, IV சரி

I, II, III சரி

III சரி

Question No.70

“உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும்
பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்றே” எனப்
பகர்ந்தவர்

சோழன் நல்லுருத்திரன்

பாலை பாடிய பெருங்கடுங்கோ

பாண்டியன் உக்கிரப் பெருவழுதி

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

**Question No.71**

மெய்யுவமத்திற்குரிய உருபுகள்
I.ஏய்ப்ப
II. நளிய
III. கடுப்ப
IV. மதிப்ப
இவற்றுள்

I, II, III சரி

I, III சரி

II, IV சரி

I, II, IV சரி

Question No.72

ஜோடிகுரூஸ்
I.கவிதை நூல் எழுதியவர்
II. திரைப் படத்திற்கு வசனம் எழுதியவர்
III. கொற்கை என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமி
விருது பெற்றவர்
IV. எனது சனமே என்னும் ஆவணப்படம்
இயற்றியவர்

இவற்றுள்

I, IIIசரி

I, II, III, IVசரி

IIIசரி

I, II, III, IVசரியல்ல

Question No.73

நிரல்படுத்துக சதுரகராதியின் வகை

- பொருள், பெயர், தொடை, தொகை
- பெயர், பொருள், தொகை, தொடை
- தொகை, தொடை, பெயர், பொருள்
- பெயர், தொகை, பொருள், தொடை

Question No.74

துள்ளல் ஓசையுடன் வரும்பா

- ஆசிரியப்பா
-

வெண்பா

- வஞ்சிப்பா
- கலிப்பா

Question No.75

“யாதும் ஊரே யாவரும் கேளிர்”என்றவர்

- காக்கைபாடினியார்
- கணியன்பூங்குன்றனார்
- நற்செள்ளையார்
- பொன்முடியார்

Question No.76

‘தமிழ்க்காதல்’ என்னும் ஆராய்ச்சி நூலின் ஆசிரியர்

- உ.வே. சாமிநாதையர்
- மு. வரதராசன்
- வ.சுப. மாணிக்கம்
- தமிழண்ணல்

Question No.77

மணநூல் என அழைக்கப்படும் காப்பியம் எது?

- குண்டலகேசி
- சிந்தாமணி
- சிலம்பு
- மணிமேகலை

Question No.78

“வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடுகொஞ்சும்”
என்ற அடி இடம் பெற்ற சிற்றிலக்கியம்

- மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ்
- குற்றாலக்குறவஞ்சி
- மூவருலா
- முக்கூடற்பள்ளு

Question No.79

திராவிடவேதம் என்று போற்றப்படுவது

- பெரியதிருமொழி
- திருவாய்மொழி

அமலனாதிபிரான்

பெரியதிருமடல்

Question No.80

உறுதிக்கூற்று(உ):முதுமொழி வஞ்சி என்பது வஞ்சித்திணையின் ஒரு துறையாகும்.
காரணம்(கா): வஞ்சி மன்னன் பகைவர் நாட்டினைத் தீயிட்டுக் கொளுத்துவதைக் குறிப்பது முதுமொழி வஞ்சி ஆகும்

(உ) சரியல்ல ; (கா) சரியல்ல

(உ) சரி ; (கா) சரி

(உ) சரி ; (கா) சரியன்று

(உ) சரியன்று ; (கா) சரி

Question No.81

கோயில்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட நிலம் __________ எனப்படும்

- பிரமதேயம்
- அக்ரஹாரம்
- தேவதானம்
- பள்ளிச்சந்தம்

**Question No.82**

நிரல்படுத்துக ஏழிசைகள்

- குரல், விளரி, தாரம், கைக்கிளை, இளி, உழை, துத்தம்
- குரல், கைக்கிளை, துத்தம், உழை, இளி, தாரம், விளரி
- குரல், துத்தம், கைக்கிளை, இளி, உழை, விளரி, தாரம்
- குரல், உழை, இளி, துத்தம், கைக்கிளை, தாரம், விளரி

**Question No.83**

“கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா” என வினவியவர்

பட்டினத்தார்

சிவவாக்கியர்

திருமூலர்

பத்திரகிரியார்

Question No.84

'சுரதா'வின் இயற்பெயர்

ராஜகோபால்

இராமலிங்கம்

ராமசாமி

ரங்கராஜன்

Question No.85

"தந்தையும் தாயும் தொழு தெழுக" என உரைக்கும் அறநூல்

சிறுபஞ்சமூலம்

ஏலாதி

திரிகடுகம்

ஆசாரக்கோவை

Question No.86

நிரல்படுத்துக கைக்கிளைக்குரிய தலை மக்கள்

- மறையோர், வணிகர், மன்னவர், சூத்திரர்
- சூத்திரர், மறையோர், வணிகர், மன்னவர்
- மன்னவர், சூத்திரர், வணிகர், மறையோர்
- மறையோர், மன்னவர், வணிகர், சூத்திரர்

Question No.87

நிரல்படுத்துக தண்டி கூறும் சித்திர கவிகள்

- மாலைமாற்று, நாகபந்தம், சக்கரபந்தம், சுழிகுளம்
- மாலைமாற்று, சுழிகுளம், சக்கரபந்தம், நாகபந்தம்
- சக்கரபந்தம், நாகபந்தம், சுழிகுளம், மாலைமாற்று
- சக்கரபந்தம், சுழிகுளம், நாகபந்தம், மாலைமாற்று

Question No.88

ஆழ்வார்கள் எண்ணிக்கை மொத்தம்

- பதினெட்டு
- பன்னிரண்டு
- அறுபத்துநான்கு
- அறுபத்துமூன்று

**Question No.89**

அற இலக்கியம் படைக்க ஏற்ற யாப்பு வடிவம்

- ஆசிரியப்பா
- வஞ்சிப்பா
- கலிப்பா
- வெண்பா

**Question No.90**

எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றுக்கும் வரையறை செய்யும் இலக்கணநூல்

- வீரசோழியம்
- அகத்தியம்
- நன்னூல்
- 

தொல்காப்பியம்

Question No.91

“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்”
என்ற அடி இடம் பெற்ற நூல்

- மணிமேகலை
- கம்பராமாயணம்
- சீவகசிந்தாமணி
- சிலப்பதிகாரம்

Question No.92

நிரல்படுத்துக திருக்குறளில் அறத்துப்பால்

- பாயிரம், இல்லறவியல், ஊழியல், துறவறவியல்
- பாயிரம், ஊழியல், துறவறவியல், இல்லறவியல்
- பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
- பாயிரம், ஊழியல், இல்லறவியல், துறவறவியல்

Question No.93

“ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே” என்றவர்

- தேவகுலத்தார்
- பொன்முடியார்
- இறையனார்
- ஓரம்போகியார்

Question No.94

‘குயில்பாட்டு’ என்னும் கவிதை நூலின் ஆசிரியர்

- பாரதிதாசன்
- கண்ணதாசன்
- வாணிதாசன்
- சுப்பிரமணிய பாரதியார்

Question No.95

‘நந்தனார் சரித்திரக் கீர்த்தனை’ என்னும் நூலை இயற்றியவர்

- சோமசுந்தரபாரதியார்
- கோபாலகிருஷ்ணபாரதியார்

சுப்பிரமணியபாரதியார்

சுத்தானந்தபாரதியார்

Question No.96

இரும்புக்கடலை என அழைக்கப்பெறும் நூல் எது?

- கலித்தொகை
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- புறநானூறு

Question No.97

மார்கழித்திங்கள் வைகறையில் வைணவர்களால்
பாராயணம் செய்யப் பெறும் நூல்

- நாச்சியார்திருமொழி
- திருப்பாவை
- பெரியதிருமொழி
- திருவாய்மொழி

Question No.98

பொருத்துக.

(A) அஞ்ஞாடி — 1) வெ. அண்ணாமலை
(B) கம்பாநதி — 2) எஸ். வைத்திலிங்கம்
(C) மானுடம் வெல்லும் — 3) உ. ராமச்சந்திரன்
(D) செடல் — 4) பூ. மாணிக்கவாசகம்

- A-4,B-3,C-1,D-2
- A-4,B-1,C-2,D-3
- A-4,B-1,C-2,D-3
- A-4,B-3,C-2,D-1

**Question No.99**

“தூங்காதே தம்பி தூங்காதே” என்ற திரைப்படப்பாடலின் ஆசிரியர்

- உடுமலை நாராயணகவி
- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

மருதகாசி

கண்ணதாசன்

Question No.100

பொருத்துக.

(A) சிவன் 1) துடி

(B) மாயோன் 2) பாண்டரங்கம்

(C) முருகன் 3) பேடி

(D) காமன் 4) மரக்கால்

A-3,B-4,C-2,D-1

A-2,B-4,C-1,D-3

A-3,B-1,C-4,D-2

**A-2,B-3,C-4,D-1**